# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20406/SCIC/2023**

திரு.ஜெ.இராஜாராம் த/பெ.ஜெயராமன்
எண். 144, காந்தி சாலை — மேல்முறையீட்டாளர்
புலிப்பாக்கம் கிராமம்
செங்கல்பட்டு - 603 002.

//எதிர்//

1.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 28.02.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 31.03.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 21.11.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.04.2025 |
| 5 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 23.04.2025, |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "செங்கல்பட்டு மாவட்டம் (ம) வட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், புலிப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட எடையான்கொடு மாந்தாங்கல் கிராமத்தில் தாங்கல் ஏரியிலிருந்து (புல எண்.62) சட்டத்திற்கு புறம்பாக மண் எடுக்கப்பட்டது தொடர்பாக மற்றும்

இதற்கு துணை புரிந்த அப்போது பணியிலிருந்த கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நான் 29/07/2022 அன்று தங்களது அலுவலகத்தில் அளித்த புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட துறை சார்ந்த நடவடிக்கைகள் விசாரணை அறிக்கை மற்றும் கள ஆய்வு தொடர்பான அறிக்கை, இப்புகார் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து கோப்புகள் மற்றும் பதிவுறுக்களின் சான்றிடப்பட்ட நகலினை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழ் அளிக்க வேண்டுகிறேன்" எனக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் யாரொருவரும் ஆஜராகவில்லை. இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை ஆணையத்தின் அடுத்த விசாரணையின் போது நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. ஆணையத்தின் அடுத்த விசாரணை காணொளி காட்சி வாயிலாக நடைபெறும். அவ்விசாரணைக்கான அழைப்பாணை (1) மனுதாரர் (2) பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.**

ஒம்./-(**முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20406/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.ஜெ.இராஜாராம் த/பெ.ஜெயராமன்
எண். 144, காந்தி சாலை
புலிப்பாக்கம் கிராமம்
செங்கல்பட்டு - 603 002.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC